இதுவரை 31 பிரமாண்டமான தூண்கள் அமைப்பு:

# கோயம்பேடு-பரங்கிமலை இடையே முழுவீச்சில் கட்டப்படும் பறக்கும் ரெயில் பாதை

## 2013-ம் ஆண்டு இந்தப் பாதையில் மெட்ரோ ரெயில் ஓடும்

சென்னை, ஆக.28-

கோயம்பேடு-பரங்கிமலை இடையே சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் ரெயில் பாதை அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதுவரை 31 பிரமாண்டமான தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதையில் 2013-ம் ஆண்டு மெட்ரோ ரெயிலை இயக்க திட்டமிட்டுள்ளனர்.

### ரூ.14,600 கோடியில் மெட்ரோ ரெயில் திட்டம்

நாட்டிலே 4-வது பெரிய நகரமான சென்னை வேகமாக வளர்ந்து வருகிறது. நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்கிறது. இதைக் குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. அதன்படி, மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. வண்ணாரப்பேட்டையில் இருந்து அண்ணாசாலை வழியாக விமான நிலையம் வரை ஒரு வழித்தடம் அமைக்கப்படுகிறது. மற்றொரு வழித்தடம் சென்னை சென்டிரலில் இருந்து பரங்கிமலை வரை செல்லும்.

இந்த திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.14 ஆயிரத்து 600 கோடி. இதில், 20 சதவீதத்தை அளிக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரை ரூ.152 கோடியே 79 லட்சம் வழங்கியுள்ளது. தமிழக அரசு ரூ.1,050 கோடி ஒதுக்கியுள்ளது. கடந்த மாதம் வரை இந்த திட்டத்திற்காக ரூ.306 கோடி செலவிடப்பட்டு இருக்கிறது. திருவொற்றியூர் வரை இந்த திட்டத்தை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாக தெரிகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது.

### பறக்கும் பாதைக்காக 31 தூண்கள் அமைப்பு

முதல்கட்டமாக, கோயம்பேட்டில் இருந்து பரங்கிமலை (ராணுவ அலுவலர் பயிற்சி மையம்) வரை சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.508 கோடியே 63 லட்சத்தில் பறக்கும் பாதை அமைக்கப்படுகிறது. 2 பெரிய ஒப்பந்ததாரர்கள் இந்தப் பணியை மேற்கொண்டுள்ளனர். தற்போது கோயம்பேட்டில் இருந்து அசோக்நகர் வரை ($4\frac{1}{2}$ கிலோ மீட்டர்) பறக்கும் பாதைக்காக பிரமாண்டமான தூண்கள் அமைக்கப்படுகின்றன. இது வரை 31 தூண்கள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன.

கோயம்பேடு மார்க்கெட் அருகில் ரூ.20 கோடியே 52 லட்சத்தில் மெட்ரோ ரெயில்கள் நிறுத்துமிடமும், பணிமனையும் கட்டப்படுகிறது. கோயம்பேடு, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர்/கே.கே.நகர் ஆகிய 5 இடங்களில் ரூ.139 கோடியே 54 லட்சம் செலவில் பிரமாண்டமான பறக்கும் மெட்ரோ ரெயில் நிலையங்கள் கட்டப்பட உள்ளன. அதுபோல, சின்னமலை (சைதாப்பேட்டை), கிண்டி, ஆலந்தூர், ராணுவ அலுவலர் பயிற்சி மையம், சிட்கோ ஆகிய 5 இடங்களிலும் பறக்கும் மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2013-ம் ஆண்டில் ரெயில் ஓடும்

மெட்ரோ ரெயிலுக்கான ஏ.சி. பெட்டிகள் ரூ.1,471 கோடியே 38 லட்சத்தில் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பெட்டிகளை வடிவமைத்து, தயாரித்து, சோதனை ஓட்டம் செய்து, பயிற்சி அளிக்கும் பணியை பெரிய நிறுவனம் ஒன்று ஏற்றுள்ளது. மேற்கண்ட அனைத்து பணிகளும் டெண்டர் விடப்பட்டு தொடங்கப்பட்டு உள்ளன. முதல்கட்டமாக, 2013-ம் ஆண்டு கோயம்பேடு முதல் பரங்கிமலை வரை பறக்கும் பாதையில் மெட்ரோ ரெயிலை இயக்க திட்டமிட்டுள்ளனர்.

"மெட்ரோ ரெயில் திட்டப் பணிக்காக இந்த ஆண்டு மத்திய அரசு ரூ.652 கோடி ஒதுக்கி இருக்கிறது. இந்த நிதியைப் பெறுவதற்கான நடைமுறையில்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டு உள்ளதால் விரைவில் நிதி கிடைத்துவிடும். மாநில அரசு ஒதுக்கியுள்ள நிதி ஏராளமாக இருப்பதால் மெட்ரோ ரெயில் திட்டப்பணிகளில் தொய்வு எதுவும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக முழுவீச்சில் பணிகள் நடைபெற்று வருகின்றன'' என்று சென்னை மெட்ரோ ரெயில் திட்ட நிறுவனத்தின் பொதுமேலாளர் (மக்கள் தொடர்பு) எஸ்.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.